# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



137

<u>பதிவு அஞ்சல் மூலம்</u>

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு.பா.முருகேஷ், இ.ஆ.ப.,
நகர் ஊரமைப்பு இயக்குநர் (முகூபொ),
807, அண்ணாசாலை, சென்னை- 2.

பெறுநர்
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு.

<u>ந.க.எண்.22057/2019/TCP5, நாள்.22.07.2020</u>

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை-2 - செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி / கிராமம், நில அளவை எண்கள்.64/2, 3, 4, 5, 6A, 6B, 8, 9A, 9B, 64/10A-ல் அமையும் 5.03 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வரைபடம் - ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. மனுதாரர் திருமதி. S.தாரா சுஷில் குமார் (ம) மூவர் விண்ணப்பம் நாள்.25.09.2019, 04.05.2020 மற்றும் 16.07.2020.
2. தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கடிதம் ந.க.எண்.55/2020/ஆ1, நாள்.18.03.2020.
3. உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் எண்.1112/2019/மாஉதிகு, நாள்.14.11.2019.
4. இவ்வலுவலகக் கடிதம் இதே எண் நாள்.28.02.2020.
5. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.14619/88பிசிசி, நாள்.27.04.1988
6. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.40483/90எல்ஏ1, நாள்.7.11.1992
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7978/2012 எல்ஏ2, நாள்.19.4.2012
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/07/LA1, நாள்.08.09.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.2201/17/சிபி, நாள்.28.09.2017.
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.

-------

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 4-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.28.02.2020 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய கடிதம் நாள்.18.03.2020-ல் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திரம் எண்.4387/2020, நாள்.16.03.2020-ல் ஒப்படைக்கப்பட்டதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.



Galaxy Property Consultancy
Proprietor

139



2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.இ.எண்.11/2020 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3) மேலும், பார்வை 5 மற்றும் 6 ஆகியவற்றில் சுட்டியுள்ள இவ்வலுவலக சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4) பார்வை 7-ல் சுட்டிய இவ்வலுவலக சுற்றறிக்கையின்படி பொது திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானப் பத்திரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ளதன்படி மனைப்பிரிவு உரிமம் உள்ளாட்சியால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5) மனைப்பிரிவு நிபந்தனை எண்.16ன்படி திறவிடம் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்தவெளி ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதின்படி தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும், மனைப்பிரிவு நிபந்தனை 18(இ), 18(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6) மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் அனைத்தும் (Quality of Roads) உள்ளாட்சியின் தரத்திற்கேற்ப தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) சான்று பெற்ற பின்னரே உத்தேச மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்

7) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது தொழிற்சாலை மனைப்பிரிவு நிபந்தனை எண்: 16(ஈ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

9) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படும்

<u>சிறப்பு நிபந்தனை</u>

1. மனைப்பிரிவில் தார்சாலைகளாக அமைத்தும், சாலைகளுக்கான இடம் மற்றும் அணுகுசாலை விஸ்தரிப்புபணி, பூங்கா, இடம் ஆகியவற்றை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக உள்ளாட்சியிடமிருந்து சான்று பெறப்பட்டதன் பேரில் இம்மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி அனுப்பப்படுகிறது. இதன் பின்னர் மனைப்பிரிவில் தேவையான பாலங்கள், சாக்கடை, வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், தார் சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளதையும் இட நேராய்வின் மூலம் உறுதி செய்த பின்னரே மண்டல அலுவலகத்தால் இம்மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டதை வழங்குவதை உள்ளாட்சிக்குத் தெரிவித்து வரைபடங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

For Galaxy Property Consultancy

Proprietor

141



2. பெறப்பட்ட நிழற்படத்தில் (Photo) அடிப்படை வசதிகள், சாக்கடை வடிகால் வசதி, தெரு மின் விளக்கு அமைக்கப்படவில்லை. மேற்கண்ட வசதிகள் அமைக்கப்பட்ட பின்னரே இம்மனைப்பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

3. பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறையில் சர்வே எண்கள் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

4. பார்வை 9-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "The TamilNadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the TamilNadu Real Estate (Regulation & Development Act 2016, The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ள வேண்டும்.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
( 4 நகல்கள்)

(ஒம்)/-பா.முருகேஷ்
நகர் ஊரமைப்பு இயக்குநர் (மு.கூ.பொ)

நகல்:

1) தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.),
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், திருப்போரூர்,
புதுப்பாக்கம் ஊராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்.
(கடிதம் மட்டும்)

2) மனுதாரார்
1) திருமதி. S.தாரா சுஷில் குமார்,
2) திரு.சுஷில் குமார்,
3) தீரஜ் கிருஷ்ணா மற்றும்
4) அஸ்வத் சூரியா,
எண்.2A, வேதாந்தா தேசிகர் தெரு, பழனிதோப்பு,
மைலாப்பூர், சென்னை-600 004. (கடிதம் மட்டும்)

3) இருப்பு கோப்பு - (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

4) கோப்பு - (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

For Galaxy Property Consultancy
Proprietor

24/7/2020
நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்.

142

**துணை இயக்குநர் (பொ)/உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை அலுவலகம் செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.கி.சந்திரசேகர்,B.E., M.T.P.,**

ந.க.எண்.1112/ 2019 மாஉ திகு செ.மா-5 நாள் :05 .09.2020

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம் - செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவை எண்கள்.64/2, 3, 4, 5, 6A, 6B, 8, 9A, 9B மற்றும் 10A - 5.03 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் **Tmt. Thara Susil Kumar & 3 Others,** அவர்களின் விண்ணப்பம் நாள். 25.09.2019 மற்றும் 06.11.2019.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.22057/2019/TCP -5, நாள். 22.07.2020.
3. தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), புதுப்பாக்கம் ஊராட்சி கடித ந.க.எண்.55/2020/ஆ1, நாள். 18.03.2020.
4. உறுப்பினர் செயலர்(பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் எண்.1112/2019/மாஉதிகு நாள்:14.11.2019.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14619/88/பிசிசி, நாள். 27.04.1988.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40483/90 எல்ஏ1, நாள்.07.11.1992.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.ந.க.எண்.7978/2012/ எல்ஏ2, நாள்.19.04.2012.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள். 08.09.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2201/2017/SPL-Cell, நாள்.28.09.2017.
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
11. அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
12. மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும 171- வது கூட்டத் தீர்மானம் எண்.02, நாள். 02.09.2020.
13. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.03.08.2020 (அபிவிருத்திக் கட்டணம் செலுத்தக் கோரியது)
14. மனுதாரர் **Tmt. Thara Susil Kumar & 3 Others,** அவர்களது கடிதம் நாள்.05.08.2020 (அபிவிருத்திக் கட்டணம் செலுத்தியது)

******

For Galaxy Property Consultancy

Proprietor

**உத்திரவு**

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம் - செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவை எண்கள்.64/2, 3, 4, 5, 6A, 6B, 8, 9A, 9B மற்றும் 10A - 5.03 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான வரைபடத்திற்கு பார்வை 2-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவில் **ம.வ/ந.ஊ.இ.எண்.11/2020** என்ற எண்ணில் தொழில் நுட்ப ஒப்புதல் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி வழங்கப்பட்டுள்ளது.

1. மேலும் பார்வை 5 மற்றும் 6-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. பார்வை 7-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி பொது திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானப் பத்திரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ளதன்படி மனைப்பிரிவு உரிமம் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.
3. மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன்படி திறவிடம் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்தவெளி ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதின்படி தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), புதுப்பாக்கம் ஊராட்சி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும், மனைப்பிரிவு நிபந்தனை 18 (இ), 18 (உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
4. மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் அனைத்தும் (Quality of Roads) உள்ளாட்சியின் தரத்திற்கேற்ப தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் சான்று பெற்ற பின்னரே உத்தேச மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்,
5. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.16(ஈ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.
6. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

For Galaxy Property Consultancy

Proprietor

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1. மனைப்பிரிவில் தார்சாலையாக அமைத்தும், சாலைகளுக்கான இடம் மற்றும் அணுகுசாலை விஸ்தரிப்புபணி, பூங்கா,இடம் ஆகியவற்றை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக உள்ளாட்சியிமிருந்து சான்று பெறப்பட்டதன் பேரில் இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி அனுப்பப்படுகிறது. இதன் பின்னர் மனைப்பிரிவில் தேவையான பாலங்கள், சாக்கடை, வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதனையும், தார் சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளதனையும் இட நேராய்வின் மூலம் உறுதி செய்த பின்னரே உள்ளாட்சிக்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

2. மனைப்பிரிவு உத்தேசத்திற்கு சாக்கடை வடிகால் வசதி மற்றும் தெரு மின்விளக்கு வசதிகள் அமைப்பதற்கு உள்ளாட்சியால் உரிய கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் அல்லது அமைக்கப்பட்டிருக்கிறதா என உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. பார்வை-8 ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த் துறையில் சர்வே எண்கள் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

4. பார்வை-9ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms. No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016, The promoter has to advertise, Market, book sell or offer for sale or invite persons to purchase in amy manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority -ன்படி நடவடிக்கை தொடருமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்.

மேற்படி தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட உத்தேச மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்க பார்வை 12-ல் கண்ட உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மானத்தில் திட்ட அனுமதி அளிக்க தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து **ம.வ/மா.உ.தி.கு எண். 12/2020** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

For Galaxy Property Consultant

Proprietor

149

மேற்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்க தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.உ) புதுப்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

மேற்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவுக் கடிதம், வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5.9.20

துணை இயக்குநர் (பொ)/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

இணைப்பு
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள்
நிபந்தனைகளுடன்- 2 தொகுப்பு

பெறுநர்
1. தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
புதுப்பாக்கம் ஊராட்சி,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,

நகல்
1. **Tmt. Thara Susil Kumar & 3 Others,**
No:2A, Vedantha Desikar Street,
Puliyanthopu, Mylapore,
Chennai – 600 004.

2. நகர் ஊரமைப்பு ஆணையர்,
சென்னை - 2 அவர்களுக்கு
மனைப்பிரிவு வரைபடம் (ம)
மனைப்பிரிவு நிபந்தனைகளுடன்
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர்,
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் (ம) நிபந்தனைகள்.

For Galaxy Property Consultancy

Proprietor

153

தனி அலுவலர், புதுப்பாக்கம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.

ந.க.எண்.55/2020/ஆ1.

நாள். .09.2020

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.64/2, 3, 4, 5, 6A, 6B, 8, 9A, 9B & 10A-ல் 5.03 ஏக்கர் பரப்பில் அமையும் குடிமிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை - 1.துணை இயக்குநர்(பொ) / உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.1112/2019/மாஉதிகு செ.மா-5 நாள்.05.09.2020.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.22057/2019/TCP-5 நாள்.20.12.2019.
3.உதவிப்பொறியாளர் / மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கை நாள். . .2019.
4.தானபத்திரம் எண். 4387/2020 நாள்.16.03.2020.
5.ஊராட்சி மன்றத் தீர்மான எண்.162 நாள்.12.03.2020
6.இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள். .09.2020.
7.புதுப்பாக்கம் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.85 நாள்.11.09.2020. மற்றும் பலவகை வரவு ரசீது எண்.7213 நாள்.11.09.2020.

*********

உத்திரவு

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.64/2, 3, 4, 5, 6A, 6B, 8, 9A, 9B & 10A-ல் 5.03 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, மாமல்லபுரம் உள்ளூர்திட்டக் குழுமம், மாமல்லபுரம் அவர்களின் ஒப்புதல் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் உதவிப்பொறியாளர் / மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கையின்படி, பார்வை 3-ல் காணும் தானபத்திரத்தின்படி, 7678.92சதுர மீட்டர் நிலப்பரப்பு (சாலை, பூங்கா, மூலைமுடுக்கு, பொதுஉபயோக இடம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம்) ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 6-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, வளர்ச்சிக்கட்டணம் ரூ.2,72,906/- (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஆறு மட்டும்) ஊராட்சியில் செலுத்தியமைக்கான பலவகை வரவு ரசீது எண்.7213 நாள்.11.09.2020 மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின்

Galaxy Property Consultancy
Proprietor

155

விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றம் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3) எந்த ஒரு அடிப்படை வசதிக்கான கட்டமைப்பு பணி முடிவுற்ற பின்னர் இவ்வொன்றிய பொறியாளரிடம் அதற்கான தரச்சான்று பெற வேண்டும்.

4) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ண்பபதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

5) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

6) மனைப்பிரிவு சிறப்பு நிபந்தனைகளான 19 (இ) மற்றும் 19(உ) குறித்து ஏதேனும் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

7) இம்மனைப்பிரிவு தொடர்பாக பார்வை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 26 வரையிலான நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படவேண்டும். நிபந்தனைகள் மீறும் வகையில் இம்மனைப்பிரிவு நிலஉரிமை குறித்து ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

8) இம்மனைப்பிரிவிற்கு மனுதாரரிடமிருந்து கூராய்வு கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் மட்டும் பெறப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

11/4/2026

தனி அலுவலர், புதுப்பாக்கம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

பெறுநர்
Mrs.Thara Sushil Kumar and Others
No.24, Vedhantha Dhesigar Street,
Palanithoppu. Mylapore, Chennai - 600004.

நகல் - ஊராட்சி செயலர், புதுப்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

For Galaxy Property Consultancy

Proprietor



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate